தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக

# செய்தி மடல்

செய்தி 18 மடல் 6 ஜூன் – 2018 ₹1.00

## மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் அமெரிக்காவின் வாஷிங்டன் மற்றும் ஒக்லகாமா மாகாணப் பல்கலைக்கழகங்களைப் பார்வையிடல்



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பன்னாட்டு உறவை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், அமெரிக்காவின் வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகம் மற்றும் ஒக்லகாமா மாகாணப் பல்கலைக் கழகத்திற்கும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து விவாதிக்கும் வகையில், மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்களும் தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் முதன்மைச் செயலர் மருத்துவர் கே. கோபால் இ.ஆ.ப.. அவர்களும் மேற்குறித்த இரு அமெரிக்கப் பல்கலைக்கழகங்களை 24.04.2018 முதல் 01.05.2018 வரை பார்வையிட்டனர். இந்நிகழ்வில் உடனிருந்த சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை இனப்பெருக்கவியல் மற்றும் ஈனியல் துறைப் பேராசிரியர் முனைவர் பி. ஸ்ரீதேவி அவர்கள் பார்வையிடல் நிகழ்வை ஒருங்கிணைப்புச் செய்தார்.

மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர், தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் முதன்மைச் செயலர் ஆகியோர் அமெரிக்காவின் புல்மனில் உள்ள வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகத்தை 24.04.2018 முதல் 27.04.2018 வரை பார்வையிட்டனர். இப் பார்வையிடல் நிகழ்வைப் பேராசிரியர் மற்றும் இனப்பெருக்கவியல் வல்லுநரும் தானுவாஸின் முன்னாள் மாணவருமான டாக்டர் ராம் காசிமாணிக்கம் அவர்கள் ஒருங்கிணைத்தார். நிகழ்வின்போது மாண்புமிகு அமைச்சர், முதன்மைச் செயலர் ஆகியோர் பன்னாட்டுத் திட்டங்களுக்கான துணைத் தலைவர் டாக்டர் ஆசிப் ஜெ. சௌத்ரி, வாஷிங்டன் பல்கலைக்கழகத்தின் முதன்மை மற்றும் செயல் துணைத் தலைவரும் கல்வி அதிகாரியுமான டாக்டர் டான் பெர்னார்டோ, முதல்வர்கள், இணை முதல்வர்கள், இயக்குநர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்களைச் சந்தித்தனர். மேலும், வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழக வளாகம், கால்நடை மருத்துவமனை, கறவை/இறைச்சி மாட்டுப் பண்ணை, பெர்டினன்ட் ஐஸ் க்ரீம் பாலகம் ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.



மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர், தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் முதன்மைச் செயலர் ஆகியோர் அமெரிக்காவின் ஒக்லகாமா நகரத்தில் உள்ள ஒக்லகாமா மாகாணப் பல்கலைக்கழகத்தை 28.04.2018 முதல் 01.05.2018 வரை பார்வையிட்டனர். ஒக்லகாமா மாகாணப் பல்கலைக்கழகத்தின் கல்வி விவகாரத்திற்கான தலைவர் டாக்டர் பர்ன்ஸ் ஹர்கிஸ், துணைத் தலைவர் டாக்டர் கேரி சண்டேபர், முதல்வர்கள், இணை முதல்வர்கள், இயக்குநர்கள், பேராசிரியர்கள் மற்றும் லாங்க்ஸ்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையத்தின் முதல்வர் மற்றும் ஆராய்ச்சியாளர்களுடனான சந்திப்பிலும் பங்கேற்றனர். இந்நிகழ்வை ஆராய்ச்சி இணை முதல்வர் டாக்டர் ஜெரி மலாயர், பேராசிரியரும் தானுவாஸின் முன்னாள் மாணவருமான டாக்டர் ஆசிஷ் ரஞ்சன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். ஒக்லகாமா மாகாணப் பல்கலைக்கழக வளாகம், போரன் கால்நடை மருத்துவப் பயிற்சி மருத்துவமனை, ஒக்லகாமா கால்நடை நோய் கண்டறிதல் ஆய்வகம், கால்நடை வளத் துறை, ஒக்லகாமா மாகாணப் பல்கலைக்கழகத்தின் ராபர்ட் எம். கேர் உணவு மற்றும் வேளாண் உற்பத்திப் பொருள்கள் மையம், பெர்குசன்ஸ் பால்பண்ணை, ஒக்லகாமா நகர ஸ்டீவன்சன் புற்றுநோய் மையம், லாங்க்ஸ்டன் பல்கலைக்கழக ஆட்டுப் பண்ணை ஆகியவற்றை மாண்புமிகு அமைச்சர், முதன்மைச் செயலர் ஆகியோர் பார்வையிட்டனர்.

அமெரிக்காவின் வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகம், ஒக்லகாமா மாகாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் நடைபெற்ற சந்திப்புகளில் அப்பல்கலைக்கழகங்களைப் பார்வையிட்டதன் நோக்கம், அப்பல்கலைக்கழகங்களுடன் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் அந்த ஒப்பந்தத்திற்கும் மேலாக அப்பல்கலைக்கழகங்களைப் பார்வையிட்ட தங்களின் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைப் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் முதன்மைச் செயலர்

மருத்துவர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் எடுத்துக் காட்டினார். மேலும், மேற்குறித்த பல்கலைக்கழகங்களில் நடைபெற்ற சந்திப்புகளில் மாணவர் பரிமாற்றம், ஆசிரியர் பரிமாற்றம் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் கல்வி பயிலச் சம்பளத்துடன் விடுப்பு அளிப்பு, இணைய வசதிகள்மூலம் பயிற்சி மற்றும் படிப்பு, தனியார் துறையுடன் இணைந்து கல்வி நிலையங்களுக்கு இடையே கூட்டிணைவு ஆராய்ச்சித் திட்டங்கள் ஆகியவை முக்கியமானவையாக இனங்காணப்பட்டன. முதன்மைச் செயலர் அவர்கள் பயிற்சி தொடர்பான படிப்புத் திட்டங்களை உருவாக்கவும் வேளாண் வணிகம், உணவியல், தோட்டக்கலை, பயிர் உற்பத்தி ஆகியவையும் இவை தொடர்பான பால் பண்ணை, கோழி, உணவுத் தானியங்கள், மக்காச்சோளம், மதிப்புக் கூட்டல் மற்றும் உற்பத்திப் பொருள் உருவாக்கம் பற்றியும் முழு ஈடுபாடு காட்டினார். மேற்குறித்த இரு பல்கலைக்கழகங்களில் உள்ள மருத்துவமனை மற்றும் ஆய்வகங்களைப் பார்வையிட்டது, அவற்றில் உள்ள சிறந்த முறை மற்றும் பின்பற்றப்படுகிற அணுகுமுறை குறித்த விவாதத்தை முன்னெடுத்தது. முதன்மைச் செயலர் அவர்கள் இரு பல்கலைக்கழகங்களிலும் உள்ள ஒருங்கிணைந்த அணுகுமுறைப் பாராட்டி, தமிழ்நாட்டில் உள்ள வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க முறையை மேம்படுத்த அவ்வணுகுமுறை பின்பற்றத் தக்க ஒரு மாதிரியாகக் கருதத் தக்கது என்றார்.

## மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளைப் பார்வையிடல்



**பல்கலைக்கழகத் தலைமை நிலையம்:** மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே. பாண்டியராஜன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. அலெக்சாண்டர், தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறையின் முதன்மைச் செயலர் மருத்துவர் கே. கோபால், இ.ஆ.ப., ஆகியோர் 08.05.2018அன்று மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தலைமை நிலையத்தைப் பார்வையிட்டு ஆய்வுசெய்தனர். இதன் ஒரு பகுதியாக, பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளத்தைப் பார்வையிட்டு, அதிலுள்ள தொழில்நுட்ப நடவடிக்கைகளைப் பற்றி ஆய்வுசெய்தனர். அதன் பிறகு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பல்கலைக்கழகத்தின் பல்வேறு நடவடிக்கைகள், கால்நடை மற்றும் கோழி வளர்ப்பில் மேற்கொள்ள வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் பற்றி மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும் முதன்மைச் செயலர் அவர்களும் அறிவுறுத்தினார்கள். இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன், பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் மா. திருநாவுக்கரசு மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.



**கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி:** மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் 14.05.2018 அன்று உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை புரிந்து, கல்லூரியின் உணவுப் பதனிடல் மையம், தொழில்நுட்ப வணிகப் பெட்டக மையம், பால் பொருள் ஆலோசனை மையம் ஆகியவற்றைப் பார்வையிட்டுக் கல்லூரியில் பயிற்றுவிக்கப்படும் பி.டெக், எம்.டெக் மற்றும் முனைவர் பட்டப்படிப்புகளில் சேர்ந்துள்ள மாணவர்களின் வேலைவாய்ப்பு பற்றிக் கேட்டறிந்தார். இந்நிகழ்வில் உடனிருந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன், உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் முனைவர் த. பாஸ்கரன் ஆகியோர் கல்லூரியில் வழங்கப்படும் கல்வி மற்றும் நிகழ்த்தப்படும் ஆராய்ச்சி குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு விளக்கினர். மேலும், கல்லூரியில் செயல்பட்டுவரும் “உன்னத பாரதத்தை உருவாக்குதல்” திட்டம் குறித்தும் எடுத்துரைத்தனர்.

**பொட்டனேரி, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையம்:** மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்களும் மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. செம்மலை அவர்களும் 21.05.2018அன்று மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை புரிந்து நிலையத்தின் பல்வேறு பிரிவுகளையும் அங்குச் செயல்படுத்தப்படும் பணிகளையும் பார்வையிட்டனர். இந்நிகழ்வில் சேலம் மாவட்ட வருவாய் அலுவலர், மேட்டூர் வருவாய்க் கோட்டாட்சியர் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் ஆகியோர் உடனிருந்தனர்.



**சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி:** மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் 28.05.2018அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு வருகை புரிந்து, கல்லூரியில் உள்ள மருத்துவமனை, சிறிய கால்நடைக்கான உள்சிகிச்சைப் பிரிவு மற்றும் இரத்த வங்கியைப் பார்வையிட்டார். இப்பிரிவுகளில் உள்ள வசதிகள் மற்றும் அளிக்கப்படும் சேவைகளை ஆய்வுசெய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வளர்ந்த நாடுகளில் உள்ளதுபோன்று இங்குள்ள வசதிகளை மிகச் சிறந்த வசதிகளாக மாற்றியமைக்கவும் நோயுற்ற கால்நடைகளின் பாதுகாப்பான பயணத்திற்குச் சிறந்த சாலை வசதிக்காகவும் தகுந்த முன்மொழிவுகளை அளிக்கும்படி ஆலோசனை வழங்கினார். மேலும், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் மாணவர் விடுதி, பல்கலைக்கழக விருந்தினர் இல்லம் மற்றும் ஆசிரியர் குடியிருப்புகளைப் பார்வையிட்டு, அளிக்கப்படுகிற பல்வேறு வசதிகளைப் பாராட்டினார். இந்நிகழ்வில் உடனிருந்த சிகிச்சையியல் இயக்குநர் (பொ.) முனைவர் சி. பாலசுப்பிரமணியன், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் கா. குமணன் ஆகியோர் கல்லூரியின் பல்வேறு செயல்பாடுகளை விளக்கிக் கூறினர்.

## விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டம்



இந்தியவேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவி பெற்ற “விவசாயிக்கு முதலிடம்” திட்டத்தின்கீழ் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககம்மூலம் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டம், கோயம்பாக்கம் கிராமத்தில் 23.05.2018அன்று நடத்தப்பட்டது. இக்கிராமம் உள்பட திருவள்ளூர் வட்டத்தில் உள்ள தண்ணீர்குளம், கிளாம்பாக்கம், கரையான்மேடு, மேலகொண்டையூர், பந்திகாவனூர் ஆகிய ஆறு கிராமங்களில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் பங்கேற்று, விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்கக் கூடிய வகையில் உருவாக்கப்பட்ட தானுவாஸ் தாதுப்புக் கலவை, தானுவாஸ் மஸ்திகார்ட், பண்ணைக் கருவிகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வழங்கி விவசாயிகளிடையே உரையாற்றினார். அவர் தமது உரையில் பல்கலைக்கழகமானது வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தக் கூடிய குறைந்த விலையிலான பல தொழில்நுட்பங்களை உருவாக்கியுள்ளது, அவை இத்திட்டம் மூலம் பிரபலப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்றார். பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப் குமார், கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளத்தின் இயக்குநர் முனைவர் ஜி. தினகர்ராஜ், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் உழவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வி.எம். சங்கரன் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்று விவசாயிகளுடன் கலந்துரையாடினர். முன்னதாகப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அவர்கள் தண்ணீர்குளத்தில் உள்ள பல்வேறு பண்ணைகளைப் பார்வையிட்டு விவசாயிகளுடன் கலந்துரையாடினார். கூட்டத்தில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

## செல்லப்பிராணிகளின் பராமரிப்பாளர்கள் சந்திப்பு – 2018

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவத் துறை சார்பில் நாய்களில் பார்வோ மற்றும் வலிப்பு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் முதன் முறையாகச் செல்லப்பிராணிகளின் பராமரிப்பாளர்க்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி 16.05.2018அன்று நடத்தப்பட்டது. நிகழ்ச்சியைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் துவக்கிவைத்து, நாய்களில் பார்வோ மற்றும் வலிப்பு நோய் பற்றிய விழிப்புணர்வு விளக்கப் படம் மற்றும் பல்வேறு கால்நடை நோய்களைப் பற்றிய தொழில்நுட்பத் தகவல் அட்டைகளை வெளியிட்டார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் கா. குமணன், அடிப்படை அறிவியல் புல முதல்வர்(பொ.) முனைவர் இல. குணசீலன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். தொற்றுநோய்ப் பிரிவின் உதவிப் பேராசிரியர் மற்றும் பிரிவு அலுவலர் முனைவர் ம. விஜயபாரதி ‘செல்லப்பிராணிகளின் பராமரிப்பாளர்கள் சந்திப்பு –2018’ குறித்து அறிமுகவுரை ஆற்றினார். நிகழ்ச்சியின் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல் அமர்வுக்கு ஏற்பாடு



செய்யப்பட்டுச் செல்லப்பிராணிகளின் பராமரிப்பாளர்கள் வினவிய சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. முன்னதாகக் கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பா. நாகராஜன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் (பொ.) முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் கல்லூரி மருத்துவமனையில் உள்ள பல்வேறு வசதிகள் பற்றி விளக்கிக்கூறி நன்றியுரை ஆற்றினார். நிகழ்ச்சியில் 91 செல்லப்பிராணிகளின் பராமரிப்பாளர்கள் பங்கேற்றனர்.

## பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வருகை



பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் 07.05.2018அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை புரிந்து, கல்லூரியின் கீழத்தோட்டம் மற்றும் மேலத்தோட்டத்தில் உள்ள பல்வேறு பிரிவுகள் மற்றும் துறைகளைப் பார்வையிட்டுச் செயல்படுத்தப்படும் பணிகளை ஆய்வுசெய்தார். மேலும், கல்லூரிப் பணியாளர் சங்கம் ஏற்பாடுசெய்த நிகழ்ச்சியிலும் பங்கேற்றார்.

## கோடைக்காலப் பயிற்சி

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மரபியல் மற்றும் இனப்பெருக்கத் துறைமூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியில் “நாட்டின மாடுகளின் மரபுவளம் பாதுகாப்பு: புதிய அணுகுமுறை” குறித்த 21 நாள் கோடைக்காலப் பயிற்சி 02.05.2018 முதல் 22.05.2018வரை நடத்தப்பட்டது. பயிற்சியைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் துவக்கிவைத்தார். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ப. தங்கராஜ், கல்லூரியின் முன்னாள் முதல்வர் (பொ.) மற்றும்

கால்நடை மரபியல் மற்றும் இனப்பெருக்கத் துறையின் முன்னாள் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ்.என். சிவசெல்வம் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினர். பயிற்சியில்



விரிவுரைகள் அளிக்கப்பட்டதோடு காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம், மாதவரத்தில் உள்ள கோழியின ஆராய்ச்சி நிலையம், கால்நடைப் பண்ணை வளாகம், கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளம் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் மீன்வளப் பிரிவு, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா ஆகியவற்றைப் பார்வையிடலும் ஏற்பாடு செய்யப்பட்டது. 22.05.2018அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பங்கேற்று நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் கா. குமணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மொத்தம் 16 பேர் பயிற்சியில் பங்கேற்றனர்.

### ஆசிரியர்களுக்குப் பயிற்சி

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் “மரபுசார் கால்நடை மூலிகைப் பொருள்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் உருவாக்குதல்” எனும் மாநிலப் புதுமைத் திட்டத்தின் கீழ் “மரபுசார் கால்நடை மருத்துவம்” குறித்த பயிற்சி, பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கு 10.05.2018 மற்றும் 11.05.2018ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. பயிற்சியின் துவக்க விழாவில் தேனி உழவர் பயிற்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். முருகேசன், “கால்நடை மற்றும் கோழிகளில் மரபுசார் கால்நடை மருத்துவம் – ஒரு முழுப் பார்வை” குறித்துத் தலைமையுரை ஆற்றினார். பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் மற்றும் மரபுசார் கால்நடை மருத்துவ வல்லுநர் முனைவர் நா. புண்ணியமூர்த்தி அவர்கள் மரபுசார் கால்நடை மருத்துவம் குறித்த தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு, மூலிகை மருந்துகள் தயாரிப்பு குறித்துச் செயல்விளக்கம் அளித்தார். பாளையங்கோட்டை, அரசு சித்தா மருத்துவக் கல்லூரியின் குழந்தைநலத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் டி.கே. சுந்தரராஜன் அவர்கள் “கால்நடை மருத்துவத்தில் சித்த மருத்துவ முறைகள்” குறித்து விரிவுரை ஆற்றினார். பாரம்பரிய வைத்தியர்களின் உதவியுடன் கல்லூரி வளாகத்தில்



மூலிகைத் தாவரங்களை அடையாளங்காணல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பயிற்சியின் நிறைவு விழாவில் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் (பொ.) முனைவர் ஜெ. ஜான்சன் ராஜேஷ்வர் அவர்கள் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பல்கலைக்கழகத்தின் பல்வேறு புலங்களைச் சார்ந்த 23 பேராசிரியர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறையில் “சிறிய மற்றும் பெரிய பிராணிகளுக்கான கதழ் ஒலி மூலம் நோய் கண்டறியும்” பயிற்சி 21.05.2018 முதல் 23.05.2018 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த 16 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கு.அ. பாலசுப்பிரமணியம் அவர்கள் பங்கேற்று, நிறைவுரை ஆற்றிப் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். கால்நடைச் சிகிச்சை வளாகப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் இரா. இசக்கியல் நெப்போலியன், கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல்



துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் அ. குமரேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கோ. விஜயகுமார் நன்றியுரை ஆற்றினார்.

### பயிற்சி

- நபார்டு வங்கி நிதியுதவியுடன் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் பால் பண்ணையாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு சந்தைப்படுத்துதலுக்கு அவசியமான சுகாதாரம் மற்றும்



உணவுப் பாதுகாப்பு முறைகள் குறித்த செயல்விளக்கப் பயிற்சி 07.05.2018முதல் 10.05.2018வரை நடைபெற்றது. பயிற்சியைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் துவக்கிவைத்துப் பயிற்சிக் கையேடு

வெளியிட்டுத் துவக்கவுரை ஆற்றினார். பல்கலைக்கழகத் தேர்வாணையர்(பொ.) முனைவர் க.ந. செல்வக்குமார், தஞ்சாவூர் நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் டாக்டர் கா. சுப்ரமணியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் பா. மோகன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பயிற்சியில் மொத்தம் 25 கறவை மாட்டுப் பண்ணையாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

- காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம்மூலம் "முயல் வளர்ப்பு" குறித்த மூன்று நாள் பயிற்சி, வேலூர் மாவட்டம், தக்கோலம், சகாயத்தோட்டம் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு நிலைய மாணவர்களுக்கு 23.05.2018 முதல் 25.05.2018 வரை நடத்தப்பட்டது. பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் பங்கேற்றுப் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பயிற்சியில் மொத்தம் ஒன்பது பேர் பங்கேற்றனர்.

### மாடுகளில் செயற்கைமுறைக் கருவூட்டல் பயிற்சி

தேசியக் கால்நடை இனவிருத்தித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியுடன் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஈனியல் துறையில் கிராமப்புற இளைஞர்களுக்கான ஒரு மாத கால "மாடுகளில் செயற்கைமுறைக் கருவூட்டல் பயிற்சி" 25.04.2018 முதல் 24.05.2018 வரை நடத்தப்பட்டது. பயிற்சியை முன்னிட்டுத் தொடர் விரிவுரைகள், கால்நடைப் பண்ணை வளாகத்தில் செயல்முறை விளக்கங்கள் மற்றும் செய்முறைப் பயிற்சி ஆகியவை அளிக்கப்பட்டன. மேலும், பயிற்சியில் பங்கேற்றவர்களுக்குக் கால்நடைக் காப்பீடு, பதிவேடு பராமரிப்பு, சரிநிகர் ஊட்டச்சத்து மேலாண்மை, கள நிலையிலான பணி ஆகியவை குறித்துத் தகவல் அளிக்கப்பட்டது. பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் பா. மோகன் அவர்கள் பங்கேற்றுப் பயிற்சி பெற்றவர்களுக்கு உதவித்தொகை வழங்கினார்.

### பண்ணையாளர் பயிலரங்கு

மேல்மருவத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியில் "கறவை மாடுகளில் அறிவியல் முறையிலான தொழில்நுட்ப உதவியுடன் இனப்பெருக்க மேலாண்மை" குறித்த பண்ணையாளர் பயிலரங்கு, 30.05.2018அன்று செய்யூரில் நடத்தப்பட்டது. ஆவின் நிறுவனப் பயனாளிகள் உள்படத் தனியார் தொண்டு நிறுவனம் சார்ந்த 250 கறவை மாட்டுப் பண்ணையாளர்கள் பயிலரங்கில் பங்கேற்றனர். பயிலரங்கின் நிறைவு விழாவில் அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

### உலகக் கால்நடை மருத்துவ தினம் – 2018

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கண்ணந்தங்குடி மேலையூர் கிராமத்தில் கால்நடை நல முகாம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி 03.05.2018அன்று நடத்தப்பட்டு, உலகக் கால்நடை மருத்துவ தினம் கடைப்பிடிக்கப்பட்டது. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் பா. மோகன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். தஞ்சாவூர், கால்நடைப் பராமரிப்பின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் பி. மாசிலாமணி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். முகாமையொட்டிக் கால்நடை வளர்ப்பு தொடர்பான பல்வேறு பயிற்சி முறைகள் மற்றும் பல்கலைக்கழக வெளியீடுகள் இடம்பெற்ற



கண்காட்சி நடத்தப்பட்டது. வல்லுநர்கள் விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கினர். சிறந்த கலப்பின ஜெர்சி மற்றும் பிரிசியன் பசுக்கள் தேர்வு செய்யப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. முகாமில் 105 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

### விழிப்புணர்வு முகாம்



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் பல்கலைக்கழகத்தின் கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின்கீழ் "தூய பால் உற்பத்தி மற்றும் பொதுச் சுகாதாரம்" குறித்த விழிப்புணர்வு முகாம், திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டம், களக்குடி கிராமத்தில் 23.05.2018அன்று நடத்தப்பட்டது. முகாமைக் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜான்சன் ராஜேஷ்வர் அவர்கள் துவக்கிவைத்தார். முகாமையொட்டி விரிவுரைகள் மற்றும் செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டன. முகாமில் 51 பேர் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### கண்டுணர் பயணம்

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் ஆத்மா திட்டத்தின் கீழ் "ஒருங்கிணைந்த கால்நடைப் பண்ணையம்" எனும் தலைப்பில் கண்டுணர் பயணம், ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தஞ்சாவூர், இந்திய உணவுப் பதப்படுத்தல் நிலையம் ஆகியவற்றிற்கு முறையே 22.05.2018 – 23.05.2018 மற்றும் 29.05.2018 – 30.05.2018ஆம் தேதிகளில் மேற்கொள்ளப்பட்டது. பயணத்தில் தாந்தோணி மற்றும் கிருஷ்ணராயபுரம் வட்டங்களைச் சார்ந்த 100 விவசாயிகள் பங்கேற்றனர்.

### ஆய்வகத்திற்கான அங்கீகாரம் நீட்டிப்பு

பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக்கல்வி மையத்தின் கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான

**Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254**
**Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.**

**Licensed to post without prepayment No.TN/PMG(CCR)/WPP-708/2018-2020**
**REGISTERED No.TN/CC(S)DN/569/18-20**

Posted on 29.06.2018 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
**Dr. N.K. Sudeep Kumar, Ph.D.,** Director of Distance Education i/c, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327 / New No. 485, Anna salai, Nandanam, Chennai - 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University and Printed at University Publication Division, Madhavaram Milk Colony, Chennai - 600 051
**Editor: Dr. N.K. Sudeep Kumar, M.V.Sc., Ph.D., Phone: 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

மருந்துக் கண்காணிப்பு ஆய்வகமானது அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை மற்றும் ‘ஏபிடா’வின் ஆதரவுடன் செயல்படும் தேசிய ஆய்வகமாகும். இந்த ஆய்வகம், சோதனை மற்றும் அளவுத்திருத்த ஆராய்ச்சிக் கூடத்திற்கான தேசிய அங்கீகாரக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, வேதியியல் பரிசோதனைக்கான அங்கீகாரம் ஐஎஸ்ஓ/ஐஇசி 17025:2005க்கு ஏற்ப 30.03.2019வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

## இடுபொருட்கள் வழங்கல் நிகழ்ச்சி

“தமிழ்நாட்டில் தானுவாஸ் தொழில்நுட்பங்களைக் கடைபிடிப்பதன் மூலம் பழங்குடி விவசாயிகளின் தொழில்நுட்ப மேம்பாடு” எனும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் பழங்குடி மக்கள் சார்புத் திட்டத்தின்கீழ் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறைமூலம் 30.05.2018அன்று கொல்லிமலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் 45 நாள் வயதுடைய 20 கோழிக்குஞ்சுகளும், 15 கிலோ வளர்பருவக் கோழித் தீவனமும் 150 சதுர அடியில் கோழி வலையும் இடுபொருட்களாக வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கு.அ. பாலசுப்பிரமணியம் அவர்கள் பங்கேற்று இடுபொருட்களை வழங்கினார்.

## யூனியன் வங்கியின் விரிவாக்க மையம் – திறப்பு விழா

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் புதிய வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள ஏடிஎம் சேவையுடன் கூடிய யூனியன் வங்கியின் விரிவாக்க மையத்தைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் 07.05.2018 அன்று திறந்துவைத்தார். நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் பா. மோகன், பல்கலைக்கழகத்தின் தேர்வாணையர்(பொ.) முனைவர் க.ந. செல்வக்குமார் மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

## பணி ஓய்வு



பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் நிர்வாக அலுவலர் திரு. கே. சுப்பிரமணியன் அவர்கள் 31.05.2018அன்று பணி ஓய்வு பெற்றார். 17.05.1960இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 08 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகத்தின் நிதி அலுவலகத்தின் மேலாளர் திருமதி சி. அன்னக்கிளி அவர்கள் 31.05.2018அன்று பணி ஓய்வு பெற்றார். 20.05.1960இல் பிறந்த இவர், 28 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சாந்திநல்லா, செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையத்தின் வேளாண்மை உதவியாளர் திரு. பி. ராமன் அவர்கள் 31.05.2018அன்று பணி ஓய்வு பெற்றார். 10.05.1960இல் பிறந்த இவர், 32 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



புதுக்கோட்டை, மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையத் திறனறி பணியாளர் திரு. எஸ். அசோகன் அவர்கள் 31.05.2018அன்று பணி ஓய்வு பெற்றார். 31.05.1958இல் பிறந்த இவர், 32 ஆண்டும் 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் திறனில்லாப் பணியாளர் திரு. பி. எல்லையன் அவர்கள் 31.05.2018அன்று பணி ஓய்வு பெற்றார். 11.05.1958இல் பிறந்த இவர், 29ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலச்சந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் நி.கு. சுதீப் குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர் (பொ.)

**உறுப்பினர்கள்**
முனைவர் க. குலசேகர்
முனைவர் ஜி. சரத்சந்திரா
முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்
முனைவர் சி. மணிவண்ணன்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் அ. மணிவண்ணன்
முனைவர் பா. மதுகேஸ்வரன்